

இதழ்-53
01.11.2022
தூமி
பல்சுவை மின்னிதழ்
தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு
தூமியின் இதய அஞ்சலிகள்
பெருவெள்ளத்திற்கான பயணம்




# மழலைகளுடன் மனம் விட்டு பேசுங்கள்

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் எம் தேசத்தின் சமகால பத்திரிகைகளின் முன்பக்க செய்திகளை பார்த்தால் நாட்டின் நிகழ்கால நிலையிலும் எதிர்கால நிலைமை மிக மோசமாகிப் போய்விடுமோ என்கிற பதற்றம் தொற்றிக் கொள்கிறது. வயது, பால் வேறுபாடு இன்றி சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை ஆண் பெண் என சகலரையும் தன் மாய வலைக்குள் சிக்க வைத்திருக்கிறது போதைப் பொருள்.

திரைப்படங்களும், திரை நாடகங்களும், பத்திரிகைகளும், இணையமும் போதைப் பொருட்களுக்கான ஒருவித விளம்பரத்தையே வழங்குகின்றன. இதனால் அந்த பொருள் முதன்முறையாக ஒருவருக்கு அறிமுகமாகும் போது அதன் தீமைகள் தெரியாமல் இன்பமளிக்கும் ஒரு பொருளாகவே அறிமுகமாகிறது. முக்கியமாக பாடசாலை மாணவர்களின் நட்பு வட்டங்களுக்குள் இந்த போதைப்பொருள் இலகுவாக ஊடுருவி பல்கிப் பெருகி வருகிறது.

நண்பர்கள் மத்தியில் போதைப் பொருள் தரும் இன்பங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் அதிகமாக நடக்கின்றன. இதனால் அந்தப் பழக்கமில்லாதவர்களுக்கும் அதில் ஒரு நாட்டம் ஏற்பட வாய்ப்பாகிறது. ஆனால்.....

எத்தனை பெற்றவர்கள் பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளோடு போதைப்பொருளின் பாதகங்கள் பற்றி மனம் திறந்து கதைக்கிறோம்? எத்தனை ஆசிரியர்கள் இது சம்பந்தமாக மாணவர்களோடு வெளிப்படையாக உரையாடுகிறோம்?

வளரும் குழந்தைகளோடு கதைக்கவே கூடாத விசயங்களாக நாங்கள் போதைப்பொருள், உடலுறவு போன்ற குழந்தைகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கின்ற விடயங்களை வைத்திருக்கும் வரை குழந்தைகள் அதை நாடித் தவறாக பயணப்படுவதை எம்மால் தடுக்கவே முடியாது. போதைப்பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களில் எண்பது வீதத்திற்கும் அதிகமானோர் அதன் உண்மையான பாதகங்களை அறியாதோர் என்கிறது ஒரு ஆய்வு முடிவு.

எனவே, ஒரு பொருள்.்.நபர் பற்றிய முதல் அறிமுகம்தான் அந்த பொருள் மீதான நாட்டத்தை தீர்மானிக்கும். ஆகவே, போதைப் பொருளுக்கு அடிமையான சமுதாயம் சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் வீட்டில் இருந்து உங்கள் குழந்தைகளை சமூகத்திற்கு அனுப்ப முதல் போதைப் பொருட்களின் தீமைகளை வெளிப்படையாக குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுங்கள். நீங்கள் தாமதித்தால் இணையமோ, திரைப்படமோ, கூடாநட்போ முந்திக்கொள்வார்கள்.

***வெண்ணெய் உங்கள் கைகளிலேயே இருக்கிறது!***

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்கலை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 அதிசய மீன்களின் இறுதி யாத்திரை
10 ஒரு சின்னஞ்சிறுகதை
11 மலையகத்தின் முகவரி தெளிவத்தை யோசப்
13 காலமே கதை சொல்லடா
14 சித்திராங்கதா
22 மென் அதிகாரத்தின் பரிணாமம்
27 என் பெண்மையின் பரிபூரணமே..
30 ஈழச்சூழலியல்
34 டெனிஸ் உலக சக்கரவர்த்தி





# அதிசய மீன்களின் இறுதி யாத்திரை

பூக்கள் இருந்தாலும் இவற்றை தாவரங்களாய் கருதுவதில்லை. எந்நேரமும் தண்ணீரியே இருந்தாலும் போதை இவற்றுக்கு ஏறியதே இல்லை. ஆம். இயற்கையின் ஆச்சரியங்கள் மீன்களாலும் தான் எழுதப்பட்டிருக்கின்றன. கடல் நீரில் வாழும் மீனினங்களால் நன்னீரில் வாழ முடியாது. அதே போன்று நன்னீரில் வாழும் மீன்களால் கடல் நீரில் வாழ முடியாது. காரணம் உப்பு. உப்புச் செறிவுகளின் மாறுதலுக்கேற்ப தம்மை உடனடியாக தகவமைத்துக்கொள்ள அவற்றுக்கு இயலுவதில்லை. ஆனால் ஒருவகை மீன்களால் கடல் நீரான உப்பு நீரிலும் வாழ முடியும். கரை நீரான நன்னீரிலும் வாழ முடியும். அவை தான் சால்மன் (Salmon) மீன்கள்.

சால்மன்! வயிற்றிற்கும் வாய்க்கும் நெருக்கமான பெயராக இருக்கிறதா? ஆம் அதுவே தான். பதனிடப்பட்டு, ரின்களில் அடைக்கப்பட்டு, கடைகளில் விற்பனைக்கு வந்து, விருந்துகளில் ருசி சேர்க்கும் செமன் எனப்படும் சால்மன் மீன்களைத்தான் சொல்கிறேன். உங்கள் வீடுகளின் சுடுநீரில் கொதிக்கும் இந்த சால்மன் மீன்கள் நன்னீரில் பிறந்து, கடல் நீரில் வளர்ந்து மீள நன்னீரிலேயே சாகும் கதை தெரியுமா உங்களுக்கு?



பொதுவாக எல்லா மீனினங்களையும் போன்ற உடலமைப்பைத்தான் இவையும் கொண்டுள்ளன. நன்கு வளர்ந்த ஒரு சால்மன் மீனின் நீளம் ஒன்றரை அடி வரை இருக்கும். நான்கு முதல் ஐந்து வருடங்கள் வரை இவை உயிர் வாழும். அவற்றின் உடல் சிவப்பு நிறத்திலும் தலையும் வாலும் பச்சை நிறங்களிலும் இருக்கும். ஆண் மீனின் முகம் நீண்டும் அவற்றின் வாய்கள் முன்னோக்கி நீண்டு வளைந்தும் வாயில் கூறிய பற்களும் இருக்கும். நன்னீரிலும் உப்பு நீரிலும் வாழத்தக்க அமைப்பில் அவற்றின் உடல் உற்பாகங்கள் வடிவமைக்கப்பட்டும் இருக்கும்.

கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கடலிலே நன்றாக வளரும் சால்மன் மீன்கள் தாம் இனப்பெருக்கப் பருவத்தை அடைந்ததையும் இன்னுமொரு வருடத்திற்குள் தமது ஆயுள் முடிந்துவிடப் போவதையும் உணர்ந்து கொள்கின்றன. எனவே, தம் உயிர் பிரிவதற்குள் தமது சந்ததியை உருவாக்கிவிட வேண்டும் என்பதற்காக எந்த மீன்களும் செய்யத்துணியாத அற்புதம் ஒன்றை சால்மன் மீன்கள் நிகழ்த்துகின்றன. அதுதான் சால்மன் மீன்களின் தியாகங்கள் நிறைந்த தேசாந்திரப் பயணம்.

இறப்பதற்கு முதல் எல்லா மனிதர்களும் தாங்கள் கடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பார்கள். ஆனால் இந்த சால்மன் மீன்கள் நினைத்து மட்டும் பார்க்காமல் கடந்து வந்த பாதை வழியே மீள பயணித்து தம் பிறப்பிடத்தை அடைகின்றன. சவால்களும் தியாகங்களும் நிறைந்த இந்த தேசாந்திரப் பயணத்தைப் பற்றி பார்ப்போம் வாருங்கள்.

சால்மன் மீன்களின் பிறப்பிடம் நன்னீரான ஆற்றுநீர் உற்பத்தியாகும் மலைப்பகுதிகள். உப்பு நீரில் சால்மன் மீன் முட்டைகள் பொரிக்காது. அப்படியே பொரித்தாலும் சிறிய மீன் குஞ்சுகளால் அந்த உப்புச் செறிவில் வாழ முடியாது. எனவே, இனப்பெருக்க காலம் நெருங்குவதை உணரும் போது சால்மன் மீன்கள் நன்னீர் நோக்கி பயணப்படத் தயாராகின்றன. உப்புச் செறிவு நிறைந்த கடல் நீரில் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்ட சால்மன் மீன்களால் உடனடியாக நன்னீர் ஆறுகளுக்குள் நுழைந்து விடமுடியாது. ஆற்று நீர் கடல் நீரோடு சங்கமிக்கும் முகத்துவாரப் பகுதிகளை முதலில் அடையும் சால்மன் மீன்கள் அங்கு மெல்ல மெல்ல தமது உடலை நன்னீருக்கேற்ப தகவமைத்துக் கொள்கின்றன. அப்படி சில வாரங்கள் இந்தப் பயிற்சி தொடரும்.

நன்னீருக்கேற்ப தமது உடல் தயாரானதும் முகத்துவாரத்திலிருந்து ஆற்று நீரோட்டத்திற்கு எதிராக நீந்தத் தொடங்கிவிடுகின்றன. நீரோட்டத்திற்கு எதிராக நீந்துவது என்பது மனிதர்களுக்கே சவாலான விடயம். ஆற்றிலிருந்து கடலுக்குப் போவதுதான் வழக்கம். பொதுவாக எல்லா மீன்களும் நீரோட்டப் பாதையிலேயே பயணிக்கும். இங்கே

வழக்கத்திற்கு விலக்கு அளித்து கடலில் இருந்து ஆற்றை நோக்கி நீரோட்டத்திற்கு எதிராக தமது முழு சக்தியையும் பயன்படுத்தி, தம் சந்ததிக்காக சால்மன் மீன்கள் நீந்துகின்றன. எவரும் பயணிக்காத பாதைகளில் பயணிக்கும் இந்த மீன்கள் ஆச்சரியத்தின் ஆசான்கள்.

ஒருவர் வழக்கத்திற்கு முரணாகப் பயணப்படும் போது எதிர்நோக்கும் சவால்கள் ஏராளம். சால்மன் மீன்களும் அதற்கு விதிவிலக்கல்ல. அவற்றின் முதல் சவால் ஆறுகளிலிருந்து கடலை நோக்கித் தீவிரமாகப் பாய்ந்து வரும் நீர்தான். அளவில் சிறிய இந்த மீன்கள் அந்த நீரின் தீவிரத்தை எதிர்த்து நீந்தி முன்னேறும் உடற் பலத்தையும் மனோபலத்தையும் பெற்றிருக்கின்றன.

இவற்றின் இரண்டாவது எதிரி செல்லும் பாதையில் குறுக்கிடும் நீர் வீழ்ச்சிகள். எதிர்த்திசையில் பிய்ச்சி அடிக்கும் நீரையும் எதிர்த்து சுமார் 20, 30 அடிகள் உயரமான நீர் வீழ்ச்சிகளையும் தாவிக் குதித்து நீந்தி மேலே ஏறிவிடுகின்றன.

சால்மன் மீன்களின் மூன்றாவது மிகப் பெரும் எதிரி மனிதன்தான். ஒவ்வொரு வருடமும் நடக்கும் இடப்பெயர்வின் பருவ காலத்தை அறிந்துவைத்திருக்கும் மீனவர்கள் இலட்சக் கணக்கில் படையெடுக்கும் இம் மீன்களை சமுத்திரத்தில் வைத்தும் முகத்துவாரங்களில் வைத்தும் வலைவிரித்தும் பாரிய மீன் பிடி இயந்திரங்களைப் பயன்படுத்தியும் பிடித்துவிடுகின்றனர். அவ்வாறு பிடிக்கப்பட்ட மீன்கள்தான் டின்களில் அடைக்கப்பட்டு எமக்கு உணவுக்காவும் வருகின்றன. சந்ததிக்காக சால்மன் மீன்கள் செய்ய இருந்த தியாகம் திசைமாற்றப்பட்டு எமக்கு உணவாவதும் உணவுச் சங்கிலிகளின் அவிழ்க்கப்படாத முடிச்சுக்கள்தான்.

இவற்றின் நான்காவது எதிரி கரடிகள். பனிக்காலம் முடிந்து ஆறு மாதங்களாக குகைக்குள் அடைந்து உறங்கிக் கிடந்த கரடிகள் பசியெடுத்து சால்மன் மீன்களின் இடப்பெயர்ச்சிக் காலத்தில்தான் வெளியேற ஆரம்பிக்கின்றன. ஆறு மாதகாலம் பசியுடன் இருந்துவிட்டு தீர்ந்துபோன கொழுப்புச் சத்தைச்



சேகரிக்க நீர்வீழ்ச்சிகளில் சாலமன் மீன்களின் வருகையை எதிர்பார்த்து கூட்டமாக காத்திருக்கும் கரடிகள். நீர் வீழ்ச்சிக்கு எதிரே தாவித் தாவி இம் மீன்கள் மேலே ஏறும்போது கரடிகள் லபக் லபக் எனப் அவற்றைப் பிடித்து உண்டு ஏப்பம் விடும்.

இவை மட்டுமன்றி ஆங்காங்கே நரிகளும் ஓநாய்களும் கூட்டமாக வேட்டைக்குத் தயாராயிருக்கும். நன்னீர் ஏரிகளில் வாழும் அனகொண்டா வகை மலைப் பாம்புகளிடமிருந்தும் முதலைகளிடமிருந்தும் அவை தப்பிக்கவேண்டும். மேலும் பருந்து, கழுகு போன்ற இதர பறவைகளிடமிருந்தும் இவை தப்ப வேண்டும். இவ்வாறு பல்வேறு சவால்களையும் தாண்டித்தான் இந்த சால்மன் மீன்கள் தமது தேசாந்திரப் பயணத்தை வெற்றிகரமாக சென்று முடிக்கின்றன. இந்தக் கடினமான பயணத்தில் பல ஆயிரம் மீன்கள் இறந்துபோயிருக்கும். இந்தச் சவால்களையெல்லாம் கண்டு அவை தயங்குவதில்லை. வாழ்வு அல்லது சாவு என்ற திடமான நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வது எமது வாழ்க்கைக்கும் மிகப்பெரும் பாடமாகும். இவ்வாறு சுமார் 7000 கி.மீ.களைக் கடந்து இவை பயணிக்கின்றன.



எத்தகைய பூட்டுகளுக்கும் சாவிகள் இருக்கத்தான் செய்கின்றன. அதேபோல இவ்வகை வகையான ஆபத்துக்களிலிருந்து தப்பிக்கும் யுத்திகளையும் இயற்கை அந்த சால்மன் மீன்களுக்கு வழங்கியுள்ளது. ஒன்று சால்மன் மீன்களால் துரு துருவென அதி வேகமாக நீந்திச் செல்லமுடியும். மற்றையது அவை பயணிக்கும் நன்னீர் பாதையில் முளைத்திருக்கும் சிவப்புப் பச்சைப் பாசிகளின் நிறத்தில் சாலமன் மீன்களின் உடல் நிறமும் இருப்பதால் பறவைகளால் இவற்றைக் கண்டுபிடித்து வேட்டையாடுவது சிரமமாக இருக்கும்.

சாலமன் மீன்கள் புத்திக் கூர்மை மிக்கவை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவை தமது புத்திக் கூர்மையைப் பயன்படுத்தி தப்பிக்கவும் முயல்கின்றன. நீந்திச் செல்லுப்போது நீரில் ஏற்படும் அழுத்த மாற்றங்களைக் கணித்து திசையை மாற்றிக்கொள்கின்றன. கடலில் மீன் வலைத் தடுப்பு இருப்பதை உணர்ந்துகொண்டால் அவை ஒட்டு மொத்தமாக தகவல்களைப் பரிமாறிக்கொண்டு கடலுக்குள் பின்வாங்கி விடுகின்றன.

அதேபோன்று நீர் அருவிகளைக் கடந்துசெல்லும்போது அங்கே வேட்டைக்குக் காத்திருக்கும் கரடிகள், நரிகள், ஓநாய்கள் என்பற்றின் பிடியிலிருந்தும் மறைந்து தப்பித்துச் செல்லும் தொடர்பாடல் வழிமுறைகள் அவற்றிடம் உண்டு. நீரின் மேல் விழும் நிழல்கள் குறித்தும் அவை மிகக் கவனமாக

இருக்கின்றன. இராஜாலிப் பருந்துகள் பறந்து வந்து மீன்களைத் தாக்குவதை இவை அவற்றின் நிழல்களை வைத்தே ஊகித்து திசையை மாற்றி மறைந்துவிடுகின்றன. தமது தேசாந்திர பயணத்தைத் தொடரும்போது ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள இவ்வாறான பல்வேறு தற்காப்புத் திட்டங்களை அவை கொண்டுள்ளன.

இவ்வாறு பல தடைகளையும் தாண்டி இறுதியாக தாம் பிறந்த தாய் மண்ணை மீண்டும் இவை வந்தடைகின்றன. சமுத்திரத்தில் இருந்து இவ்வளதூரம் அவை பயணித்தது தாம் பிறந்த தமது பெற்றோர் தம்மை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்துவிட்டு இறந்த அந்த இடத்தை நோக்கித்தான். தாம் பிறந்த இடம் இதுதான் என்பதை சுமார் நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் அவை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மீண்டும் அதே இடத்தை வந்தடைவது ஆராய்ச்சி யாளர்களையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த இடத்தை வந்தடைந்த பின்னர்தான் ஆண், பெண் சால்மன் மீன்கள் இனப்பெருக்கத்தில் இணைகின்றன. வாழ் நாளில் ஒரு முறைதான் இவை இனப்பெருக்கம் செய்கின்றன. இணைந்த சில நாட்களில் பெண் சால்மன் மீன் ஆற்றில் நீரோட்ட வேகம் குறைவான பாதுகாப்பான இடங்களில் தனது வாலினால் பள்ளங்களைத் தோண்டும். தோண்டி அங்கே முட்டைகளை இடும். ஒரு தடவையில் ஒரு பெண் மீன் 3000 முதல் 4000 வரையில் முட்டைகளை இடும். ஒரு சால்மன் மீன் இவ்வளவு தொகையான முட்டைகளை இடும் என்றால் அங்கே குழுமியிருக்கும் ஆயிரக் கணக்கான மீன்களும் எத்தனை முட்டைகளை இடும் என்று எண்ணிப் பாருங்கள்.

முட்டைகளை இட்டு ஓரிரு மாதங்களில் பெண் மீன்கள் எல்லாம் இறந்துபோகும். அம் முட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆண் மீன்களைச் சாரும். அடுத்த இரண்டு மாதங்களில் ஆண் மீன்களும் கொத்துக் கொத்தாக இறந்துவிடும். கடல் போன்று சரியான உணவு கிடைகாததும் நீரில் உள்ள குறைபாடுகளும் பல மைல்கள் தொடர்ந்து பயணித்து வந்த களைப்பு அனைத்தும் சேர்ந்து இவற்றை ஆட்கொள்ள இவை பலவீனப்பட்டு ஆற்று ஓரங்களில் உள்ள மர வேர்களுக்குள் தஞ்சம் புகுகின்றன. இறுதியில் பிறந்த மண்ணிலேயே அவை இறந்து விடுகின்றன.

முட்டையிட்டு சரியாக நான்கு மாதங்களில் குஞ்சு சால்மன் மீன்கள் முட்டைகளை விட்டு வெளியே கிளம்பும். இலட்சக்



கணக்கில் வெளிக்கிளம்பும். இக்குட்டி மீன்களுக்கு சுமோல்ட் என்று பெயர். உடல் பலம் பெறும் வரையில் அங்கேயே சில வாரங்கள் காத்துக்கிடந்துவிட்டு தமது பெற்றோர் எவ்வழியில் இங்கே வந்து சேர்ந்தார்களோ அதே வழியில் மீண்டும் இந்தக் குஞ்சுகள் அநாதையாக கடலை நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கின்றன. இவை அளவில் மிகச் சிறியவையாக இருப்பதனால் பெரிய மீன்கள் வரும்போது இருந்த மிகப் பெரும் சவால்கள் இவற்றுக்கு இருப்பதில்லை. நீரின் திசையிலேயே இவை செல்ல வேண்டி இருப்பதனால் மிக இலகுவாக கடலைச் சென்றடைய முடியும். கடலை நோக்கிச் செல்லும் பயணத்தை சுமோல்டிபிகேஷன் (Smoltification) என்பார்கள்.

குதித்தோடும் நீர்வீழ்ச்சிகளிலும் பாய்ந்தோடும் பள்ளத்தாக்குகளிலும் பல ஆயிரம் கி.மீ. தூரம் பயணம் செய்து இறுதியாக நன்னீர் கடலில் வந்துகொட்டும் முகத்துவரங்களை இவை வந்தடைகின்றன. வந்தவுடன் கடலுக்குள் பிரவேசித்தால் இக் குஞ்சு மீன்கள் உடனடியாக உயிரிழக்கவேண்டி ஏற்படும் என்பதனை இவற்றுக்கு யார் கற்றுக் கொடுத்திருப்பார்கள்? இயற்கையின் ஆச்சரியங்களில் இதுவும் ஒன்று. இவை உப்பு நீரில் வாழத்தக்கவாறு தமது உடலைத் தயார் படுத்திக்கொள்ள சில நாட்கள் முகத்துவாரங்களில் இருந்து பயிற்சி எடுக்கும். பயிற்சியை முடித்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக சமுத்திரத்திற்குள் பிரவேசித்துவிடும். மீண்டும் வழமைபோல் அவற்றின் சமுத்திர வாழ்க்கை ஆரம்பமாகும். அங்கேயே உண்டு அங்கேயே வளர்ந்து மூன்று வருடங்களை ஓட்டிவிட்டு இனப்பெருக்கம் செய்யும் பருவத்தை அடைந்ததும் மீண்டும் இவை தமது பெற்றோர் பயணம் செய்தது போன்று, தாம் சிறு பருவத்தில் எந்த வழியில் கடலை வந்தடைந்தனவோ அதே வழியில் மீண்டும் தமது பிறப்பிடம் நோக்கிச் செல்ல ஆயத்தமாகும். இவ்வாறு ஒவ்வொருவருடமும் இந்த சால்மன் மீன்களின் தேசாந்திரப் பயணம் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

(சால்மன் மீன் பற்றிய
தகவல்களுக்கு நன்றி:-
அஷ்.எம்.என்.ஆலிப் அலி
(இஸ்லாஹி) B.A)

அவ்வாறு சமுத்திரத்திற்குள் பிரவேசித்த மகிழ்ச்சியில் சால்மன் மீன் குஞ்சு ஒன்று துள்ளிக் குதித்த போது தருணம் பார்த்துக் காத்திருந்த அந்த நீர்ப் பறவையின் அலகுகளுக்குள் அகப்படப் போகும் அந்த தருணத்தை அட்டையில் பார்க்கிறீர்கள்.

***இயற்கையின் சவால்களை எதிர்த்து பெற்றவர்களின் தியாகத்தால் பிறந்த மீன் குஞ்சு இறுதியில் அந்த பறவைக்குத்தான் உணவாகும் என்றால் இயற்கையின் நியதிகளையும் நீதிகளையும் என்னவென்று சொல்வது? இவற்றை யார் வெல்வது?***

# தூக்கமின்மை

நிலாமகன்

நேரம் இரவு 2 மணி இருக்கும். மொட்டை மாடியில் நடந்து கொண்டிருந்தான் ராஜன். பெயருக்கேற்றால் போல் அவன் ராஜா தான். ஆனால் உறக்கம் தான் வருவதில்லை.

மொட்டை மாடியில் இருந்து வீட்டு வாசற்கதவை பார்த்தான். கதவில் சாய்ந்தபடியே தூங்கி கொண்டிருந்தான் வீட்டுக் காவலாளி. ராஜனுக்கு கோபம் வர வேண்டும் ஆனால் கோபத்தை முந்திக்கொண்டு அவன் விழிகளில் வழிந்து நின்றது பொறாமை!


ஒரு சின்னஞ் சிறுகதை






மலையகத்தின் முகவரி

# தெளிவத்தை ஜோசப்




மலையக மூத்த எழுத்தாளரான சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் தனது 88 ஆவது வயதில் 21.10.2022 காலமானார்.

ஈழத்தின் சிறுகதையாளரும், நாவலாசிரியரும், இலக்கிய ஆய்வாளருமான இவர் மலையகத்தின் முகவரியாக இருந்தவர்.



இலங்கையின் அதியுயர் விருதான சாகித்யரத்னா விருதுக்கு சொந்தக்காரரான இவர் தனது படைப்புகளை மட்டுமல்ல தான் சார்ந்தவர்தம் படைப்புகள் வெளிவருவதற்கும் பெரும் துணை நின்றவர்.

சந்தனசாமி ஜோசப், 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி இலங்கையின் மலையகத்தில், பதுளை மாவட்டம், ஹாலி-எல நகருக்கு அருகில் உள்ள ஊவாக்கட்டவளை என்ற ஊரில் பிறந்தார்.

தெளிவத்தை ஜோசப் தமிழ்நாட்டில் கும்பகோணத்தின் உயர்நிலைப் பள்ளியில் கற்றதன் பின்னர், இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

இவர் ஆரம்பத்தில் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தவர். இதன்





காரணமாகவே தனது பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டார்.

அறுபதுகளில் எழுதத்தொடங்கி எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக மலர்ந்தவர். அத்துடன் இலங்கை தமிழ் ஊடகங்களால் பல்வேறு ஆக்கங்கள், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அதேபோல் இதுவரை ஆறு நாவல்களையும், மூன்று சிறுகதை தொகுதிகளையும் வெளியிட்டுள்ள தெளிவத்தை ஜோசப், இலங்கையில் தயாரிக்கப்பட்ட புதிய காற்று திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்கும் திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார்.

தமது படைப்புக்களுக்காக அவருக்கு சாகித்திய விருது, விஷ்ணுபுரம் இலக்கிய விருது (2013) சாகித்திய ரத்னா (2014) போன்ற பல விருதுகள் கிடைத்துள்ளன.





தன் எழுத்துக்களால் மலையகத்தின் வாழ்வியலை அடையாளப்படுத்திய தெளிவத்தை யோசப் அவர்களின் இழப்பு தமிழ் எழுத்துலகத்திற்கு பிரதியீடு செய்யப்பட முடியாத பேரிழப்பு என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்க முடியாது.



தன் படைப்புக்கள் வழியாக காலம் உள்ளவரை அந்த உன்னத ஆத்மா எம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். (நன்றி-இணையம்)

**அவருக்கு தூமியின் புகழ் வணக்கங்கள்.**

# காலமே கதை சொல்லடா!

என். நிலவிந்தன்
கனகராயன்குளம்



வஞ்சகம் புரி தாய்
வளமிகு நாடன்
அர்ச்சனை செய்தோய்
குருதியில் நிலம் பட
போர் தனை உலன்று
பசியது நீட்சியிலே
இனமென இல்லை
யார் உனைக் கொன்றார்
துப்பாக்கியில் பூத்திடா
பூக்களின் வாசனையே
ஆண்டுகள் கடந்து
ஆயின வாழ்க்கை
ஆயின போதும்
மாறுவதில்லை
மனங்களின் ஆறா
வடுக்களின் மாட்சி
இழந்தது கோடி
பிரிந்தது பாதி
பறவைகள் கூடும்
சிதைந்தது போலும்
காலங்கள் அழுந்தி
உரைக்கிறதே
உள்ளத்தில் ஓடும்
உறக்கங்கள் விழிக்கும்
ஆறுதல் கூற
அன்பினில் உதிக்கும்
நாள் வரை காலம்
கதை சொல்லட்டுமே

18.38
மாலை
30.09.2022




**கல்யாணி தேவி**

“எல்லாமே உண்மைதானா வேந்தே? அரியணை மீது அவாக்கொண்டு அநியாயம் நிகழ்த்தியே ஆட்சிபீடமேறினார் சங்கிலிய மகாராஜா என்பதும் உண்மைதானா? தன்னிகரில்லா தமிழ்வேந்தன் ஒரு பச்சிளம்பாலகனை கொன்று ஆட்சிபீடம் ஏறினான் என்பது முறையற்ற வடு என்பதை எங்ஙனம் மறந்தீர்கள் வேந்தே?”

வருணகுலத்தான் கண்கள் துடிதுடிக்க சங்கிலிய மகாராஜாவை பார்த்து இந்தக்கேள்வியினைக் கேட்டான்.

சிறிதும் சலனமின்றி நின்றான் சங்கிலியன்.

“நிதானம் கொள்ள வேண்டும் வருணகுலத்தாரே, தாம் என்மீது கொண்ட மரியாதையில் குற்றம் சூழ்ந்து விட்டதாய் குழப்பம் கொள்கிறீர்கள் என்பதை நான் அறிகிறேன். நான் கூறுவதை முழுதாய்க் கேளுங்கள். பின் தங்கள் முடிவு எதுவாகினும் வரவேற்கின்றேன். போரினின்று விலகி தாம் தஞ்சை திரும்ப விரும்பினும் அதற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கிறேன். அது குறித்து தஞ்சை இரகுநாதநாயக்கரிடம் கூட எக்குற்றமும் உரைக்க மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். ஆனால் அதற்குமுதல் தாங்கள் என்னுடன் வரவேண்டும். நான் சொல்வதை சிறிது கேட்கவேண்டும்.”

என்று வருணகுலத்தான் தோள்களை பற்றியவாறே யமுனா ஏரியின் மறு கரை நோக்கி அழைத்துச் சென்றான் சங்கிலியன்.

“இதோ... இந்த இடத்தில்தான்! நான் முறையற்ற விதத்தில்

கொன்றதாய் தாங்கள் அறிந்தீர்களே, அந்தக் கொலை நடந்த களம் இதுதான். இந்த அரியணையில் நான் அமர்த்தப்பட்ட சாட்சியம் இங்குதான் உருவானது. என் மனம் சிரமம் கொள்ளும் போதெல்லாம் இந்த யமுனா ஏரி நோக்கி நான் வருவதும் அதனால்த்தான். இந்த ஏரியின் சுகமான தென்றல் எப்போதும் என்மீது மட்டும் சுமையாகவே வீசும். அந்த சுமையை அனுபவிக்க விரும்பியே இவ்விடம் வருவேன். ஆம் வருணகுலத்தாரே! இந்த ஆட்சிபீடம் என்பதும் நான் விரும்பி அனுபவிக்கின்ற ஒரு சுமைதான்!"

வருணகுலத்தான் எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

"உடன் வாருங்கள் வருணகுலத்தாரே, மேலும் விளக்கமாக விளம்புகிறேன்."

என்று கூறி ஏரியின் ஒரு முனையில் இருந்த பெரிய கற்றூணை தன் புஜபலத்தை பயன்படுத்தி மெள்ள அசைக்கத் தொடங்கினான் சங்கிலியன். அந்த கற்றூணின் அடியில் படிக்கட்டுகளால் ஒரு பாதை புலப்படுவதை வருணகுலத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

கையில் தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு அந்தப்பாதை வழியே சங்கிலியன் வருணகுலத்தானை அழைத்துச் சென்றான். அந்தத் தீப்பந்த வெளிச்சத்திலேயே அந்தச் சுரங்கப்பாதை ஓர் அழகிய மாளிகை போல் இருப்பதை வருணகுலத்தான் ஆச்சரியத்தோடு கவனித்தான்.

அன்றொரு நாள் மந்திரி மனையிலிருந்து சட்டநாதர் கோயிலிற்கு சுரங்கப் பாதை வழியே சென்றதை வருணகுலத்தான் இப்போது நினைந்து கொண்டான். அந்தச் சுரங்க வழியில் கண்ட ஒரு நாற்சந்தியில் ஒரு பாதை வழியே சென்று அன்று சட்டநாதர் கோயிலை அடைந்தான். இன்னொரு பாதை கோப்பாய் மாளிகைக்கு செல்வதை அண்மையில் தான் அரசர் மூலம் அறிந்திருந்தான். அப்படியாயின் எஞ்சிய அந்தப்பாதை இந்த ஏரிக்கரை சுரங்க மாளிகைக்குத்தான் வருகிறது என்பதை வருணகுலத்தான் இப்போது ஊகித்து அறிந்து கொண்டான்.

உள்ளே நுழைய நுழைய அந்த மாளிகையின் கட்டுமானம் அவனை ஆச்சரியப்படுத்திக் கொண்டே இருந்தது. அதன் சுவர்களில் பலவர்ண சாயங்களால் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் அவனை வந்து நின்று பார்க்கச்சொல்லி அழைப்பது போல் இருந்தன. பொன்முலாம் பூசிய மரச்சட்டங்களின் நடுவே சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மன்னர்கள் பலரின் ஓவியங்களும் அங்கிருந்தன. அரசர்களை நேரில் காண்பது போலவே அத்தனை தத்ரூபமாக அந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. சங்கிலியன் கையிலிருந்த தீப்பந்தம் குறிப்பிட்ட ஒரு ஓவியச்சட்டத்தின் முன் நின்றது.

அங்கிருந்த அத்தனை ஓவியங்களிலும் இதற்கு இணை இல்லை என்பது போல இருந்தது அந்த ஓவியத்திலிருந்த மன்னரது சிம்மாசனக்காட்சி.

“தஞ்சை வீரரே! தாங்கள் இப்போது பார்த்துக் கொண்டிருப்பது தான் நிஜமான மாமன்னர் சங்கிலிய மகாராஜா.. பறங்கி இனத்திற்கே சிம்ம சொப்பனமானவர். எத்தனை முறை பறங்கியன் படையெடுத்து வந்தானோ அத்தனைமுறையும் அவன் படையை தலை தெறிக்க ஓட வைத்த வீரவேந்தன். பறங்கியனிற்கோ பறங்கியை ஆதரிக்கும் சுதேசிக்கோஅவர் ஈவு இரக்கம் பார்த்ததில்லை. அரச ஆணையை மீறி மன்னாரில் அன்று மதம்மாறிய கிட்டத்தட்ட 600-700 சுதேசிகளையும் , அவர்களிற்கு தைரியம் அளித்த வன்னி அதிகாரி உரசிங்கனையும் ஒருவர் விடாமல் ஒரே சமயத்தில் கொன்றழித்து மதம் மாற நினைத்தோர் மனதில் அன்று பெருங்கிலி உருவாக்கினார் சங்கிலிய மகாராஜா. இத்தனை வெறி கொண்டு பறங்கியனை எதிர்த்த அந்த வீரவேந்தன் திருநாமத்தை எனக்கிட்டு என்னை இந்த அரியணையில் ஏற்றியது யார் தெரியுமா? வேறுயாருமில்லை. நீங்கள் நன்கறிந்த ராஜமந்திரி ஏகம்பரம் தொண்டமனார்தான்.”

வருணகுலத்தான் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

“ஆம் தளபதியாரே, இந்த ஜகமே என்னை எதிர்த்து நின்றாலும் நான் முழுதாய் நம்பும் ஒருவராய் இராஜமந்திரியார் இருப்பதற்கு அதுதான் காரணம். இந்த ஆட்சிபீடத்தில் நான் அமரவேண்டும் என்பது எனது கனவல்ல. இராஜமந்திரியாரது கனவு! ஆம் வருணகுலத்தாரே, தெளிவுறவே கூறுகிறேன்.”

என்று அடுத்த ஓவியத்தை நோக்கி அழைத்துச் சென்றான் சங்கிலியன்.

“இதோ இவர்தான் மாமன்னர் புவிராஜ பண்டாரம். இவரது அரசவையில் நம்பிக்கைக்குரிய மந்திரியாய் திகழ்ந்தவர்தான் ஏகாம்பரம் தொண்டமனார். சங்கிலிய மகாராஜாவிற்குப்பின் எத்தனையோ வேந்தர்கள் ஆண்டு போனாலும் மீண்டும் சங்கிலியமகாராஜா போல் அஞ்சாமல் பறங்கியனை முழுதாய் எதிர்த்தவர் இவரேதான். மன்னாரை பறங்கியனிடமிருந்த மீட்டெடுக்க பெரும் படை கொண்டு புறப்பட்டார். எதிர்பார்த்த வெற்றி எட்டப்படவில்லை. மாறாக பறங்கியன் படை யாழ்ப்பாணத்தை நோக்கி குறி வைத்தது. அந்தப் போரில் வீரமரணம் அடைந்த புவிராஜபண்டார மகாராஜாவின் தலையினை ஈட்டியில் குத்தி நடுக்களத்தில் அன்று வைத்தான் அந்தக் கொடும் பறங்கியன்.

அந்த சம்பவத்திற்குப் பின் அரியணை ஏற துணிந்தவர் எவருமின்றி யாழ்மண்ணில் அடிமை வாசம் வீசத் தொடங்கியது. அரச வம்சத்தில் தமக்கென்றொரு கைப்பொம்மையாய் எதிர்மன்ன சிங்கமகாராஜாவை தெரிந்தெடுத்து அரியணையில் அமர்த்தினர் பறங்கியர்”

என்று தீப்பந்த வெளிச்சத்தில் எதிர் மன்ன மகாராஜாவின் ஓவியத்தைக் காட்டினான் சங்கிலியன்.

“அரியணையில் எதிர்மன்ன சிங்க மகாராஜா இருந்தாரே ஒழிய ஆட்சியும் அதிகாரமும் பறங்கியர் எண்ணப்படியே நடந்தது. சிந்தை தெளிவு வேந்தர்க்கு வந்து விடக்கூடதென்றே வடிவடிவான குப்பிகளில் மதுபானங்கள் அரசர்க்கு தினமும் அனுப்பிவைத்தனர் பறங்கியர். கொஞ்சம் கொஞ்சமாய் மதுவிற்கு மன்னர் அடிமையாக அவரது பழக்கவழக்கங்களும் முறை தவறி போய்க் கொண்டிருந்தது.

மோகம் அடங்காதவராய் எண்ணிக்கையற்ற மனைவிகள் அவரிற்கு தேவைப்பட்டனர். மன்னரைப்பார்த்து நாட்டுமகளிர் பயந்து ஓடவேண்டிய சூழல் ஏற்பட்டது. போதை வெறி மன்னரை அங்னனம் உருக்குலைந்திருந்தது.

அன்று அவரை தட்டிக்கேட்கக்கூடிய தைரியம் மிக்க ஒருவராய் இருந்தவர் என் தாயார் வீரவாகினி மட்டுமே. ஆம் எதிர்மன்ன சிங்கமகாராஜாவின் உடன் பிறந்த ஒரே சகோதரி என் தாயாராவார். மன்னரது அநியாயங்கள் இதற்குமேல் பொறுப்பதற்கில்லை என்று ராஜமந்திரியார் தொட்டு அரசவையில் அனைவரும் கூற தன் சகோதரன் மீது நம்பிக்கை கொண்டு அரசரை சந்திக்க சென்றார் என் தாயார்.

போதை மயக்கத்தின் உச்சத்தில் இருந்த வேந்தர்க்கு வருவது யார் என்று கூட தெரியவில்லை போலும். அங்கு என்ன அசம்பாவிதம் நடந்ததோ தெரியாது. அன்று அரசர் என்ன சொன்னார் என்று கூடத் தெரியாது. என் தாய் மாளிகைக்குள்ளே தன்னை தீயிட்டு எரித்துக் கொள்ளத் துணிந்து விட்டாள்.

அந்த வயதில் என் தாய் வீரவாகினி என் கண்முன்னே தீக்கு இரையான காட்சி இன்னும் என் கண்களில் அப்படியே நிற்கின்றது தளபதியாரே!”

சங்கிலியனின் குரல் உடைந்திருந்தது. அந்தத் தீப்பந்த வெளிச்சத்தில் அவன் கண்கள் குளமாகி இருப்பதை வருணகுலத்தான் கண்டான்.

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு சங்கிலியன் மேலும் தொடர்ந்தான்.

“யாருமற்ற அனாதையாய் நின்ற எனக்கு ராஜமந்திரியாரே அன்று துணையாய் நின்றார். சிறிது காலம் தன் நண்பர் திருமலை வன்னியர் தனியுண்ணாப் பூபால வன்னியர் தயவில் என்னை திருகோணமலையில் வசிக்கச்சொன்னார் ராஜமந்திரியார். அவரது வாக்கை ஏற்று நானும் திருகோணமலைக்கு சென்றுவிட்டேன்.

அலையும் மலையும் கூடிக்களிக்கும் அந்த அமைதியான தேசத்தில்தான் நான் கல்யாணிதேவியை சந்தித்தேன். தனியுண்ணாப் பூபாலவன்னியரின் புதல்வி! என் வெறுமைகளை எல்லாம் தன் காதலை ஊற்றி நிரப்பிய பேரழகி. திருகோணமலையும் அவளுமாய் என் வாழ்வின் பேரின்பங்களை போதுமென்னும் வரை அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

ராஜமந்திரியாரை சந்திப்பதற்காக மட்டுமே நல்லைக்கு வருவேன். அப்படியொரு சமயத்தில் தான் மன்னர் எதிர்மன்ன சிங்கர் என்னை சந்திக்க விரும்பியதாய் மந்திரியார் கூறினார். மந்திரியார் கேட்டதனால் மட்டும் மன்னரை சந்திக்க சென்றேன். பொல்லாப்பழக்கங்கள் மிஞ்சியதால் உடல் பலவீனமுற்று நோய்களின் கைதியாய் படுக்கையில் கிடந்தார் மன்னர். என்னைக் கண்டதும் என் கைகளைப்பற்றிக்கொண்டு குலுங்கி அழ ஆரம்பித்து விட்டார். தன் ஆருயிர் சகோதரி வீரவாகினியின் கொடூர மரணத்திற்கு தானே காரணமாகிக் போனதை உணர்ந்து கண்ணீரால் என் கைகளை நனைத்தார்.

“இந்தப் பாவியை உன்னால் மன்னிக்க முடியுமா? ”

என்று அவர் கேட்டபோது என் கண்களும் அன்று கலங்கி நின்றன.

அப்போதுதான் அந்த அபாயகரமான வேண்டுகோளையும் என்னிடம் விடுத்தார்.

“என் தங்கைக்கு நான் இழைத்த அநியாயத்திற்கு எனக்கொரு பிராய்சித்தம் தரமாட்டாயா? என் புதல்வி இராஜகாமினியை மணந்து இந்த நல்லை தேசத்தை எனக்குப்பின் நீ தான் ஆளவேண்டும். நீயே இந்த நாட்டினை கொடும்பிடியிலிருந்து மீட்க வல்லவன். கொடும்பாவம் புரிந்த உன் மாமனிற்காய் இந்த உபகாரத்தை நீ செய்வாயா?” என்று மன்றாடினார்.

அது மட்டும் நடக்கவே நடக்காது என்று கூறிவிட்டேன்.

“எனக்கு எதுவும் தேவையில்லை. என்னை விட்டுவிடுங்கள். என் கல்யாணிதேவி எனக்காக காத்திருக்கிறாள்.”

என்று கூறி நல்லைநகரை விட்டே வேகமாக விலகி வந்து விட்டேன்.

திருமலை கோண நாதர் சந்நிதானத்தில் எனக்கும் கல்யாணி தேவிக்கும் திருமணம் தனியுண்ணா பூபால வன்னியர் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. என் வாழ்வில் முழுமதியாய் கல்யாணிதேவி என்னுடன்- எனக்காகவே வாழ்ந்து வந்தாள்.

என் கல்யாணியின் கண்கள் அத்தனை காதலோடு என்னைக் காண்கின்ற காட்சி இப்போதும் என் கண்களிற்கு தெரிகின்றது. எத்தனை இன்பமான நாட்கள் அவை. வாழ்வில் துன்பம் வந்தாலும் என் மகிழ்வை அவள் குறைய அனுமதிக்கமாட்டாள்.

சதியோ விதியோ தெரியாது. எங்கள் இல்லறத்தின் பரிசாய் வந்த முதல் மழலை இந்த மண்ணைப்பார்க்க முன்பே விண்ணடி சேர்ந்தது. அந்த துன்பத்திலும் கூட அவள் என் இன்பத்திலே தான் அக்கறை கொண்டிருந்தாள். தன் துன்பத்தை மறந்து என்னை மகிழ்விக்கவே அவள் அன்று முயன்றுகொண்டிருந்தாள் என்பதை இப்போது எண்ணுகையில் கூட எனக்கு துக்கம் தாளவில்லை.

எனக்காகவே எல்லாம் என்று வாழ்ந்த என் கல்யாணிக்கு நான் செய்த கைம்மாறு என்ன தெரியுமா வருணகுலத்தாரே?”

அதற்கு மேல் சங்கிலியனால் பேசமுடியவில்லை. மனதின் வலி தொண்டையில் வந்து நின்றது.

வருணகுலத்தானும் எதுவும் பேசமுடியாமல் நின்றான்.

பெருமூச்சோடு தன் சோகத்தை விழுங்கியவாறே சங்கிலியன் தொடர்ந்தான்.

“மீண்டும் எக்காரணம் கொண்டும் நல்லைநகர் நோக்கி வரக்கூடாது என்ற முடிவோடு இருந்தேன். ஆனால் என் முடிவை நான் எடுக்க முடியுமா? அப்படியென்றால் விதி என்ற ஒன்றுக்கு வேலை என்ன இருக்கும்?

ஒரு நாள் எதிர்மன்ன சிங்க மகாராஜா இறந்துவிட்டதாகவும், மன்னருடைய யாரோ ஒரு காதல் கிழத்திக்குப் பிறந்த மூன்று வயது பாலகனை அரியணையில் அமர்த்தி மன்னரின் ஒன்றுவிட்ட சகோதரனான அரசகேசரி ஆட்சியலுவல்களை கவனிக்க வேண்டும் என்று அரசன் சாசனம் எழுதி விட்டுச் சென்றதாய் ஊருக்குள் பேச்சு அடிபட்டது.

அதன் உண்மைத்தன்மை பற்றி நான் அறியேன். அறிய வேண்டிய அவசியமும் எனக்கில்லை என்றே கருதினேன் அன்று. ஆனால் நல்லைமண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நாசகாரிய செயல்களிலிருந்து எம் இராட்சியத்தை மீட்டெடுக்க அரசர் சொன்னபடி நானே அரசராக வேண்டும் என்று இராஜமந்திரியார் என்னை தொடர்ந்தும் வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

அரண்மனை மாளிகைத் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அந்த மூன்று வயது பாலகன் எங்கிருந்தோ வந்த சர்ப்பம் தீண்டி இறந்தான். சர்ப்பம் தீண்டியே அந்தப் பாலகன் இறந்ததை அரண்மனை ஊழியர்கள் பலர் கண்டுள்ளனர். ஆனால் அந்த பாலகனை நான் தான் கொன்றுவிட்டதாய் அரசகேசரி மக்களிடையே வதந்தியை பரப்பி என்னைக் கொல்வதற்காய் பெரும்படையோடு திருகோணமலைக்கு வந்தான்.

மந்திரியார் மூலம் இச்செய்தியை முன்கூட்டியே அறிந்த தனியுண்ணாப் பூபால வன்னியர் என்னை இரகசியமாக மந்திரி மனைக்கு அனுப்பி வைத்தார். நானும் பூபால வன்னியர் பேச்சினை மறுக்கமுடியாமல் சென்று விட்டேன்.

மந்திரிமனையின் வழியே இதோ இந்தச்சுரங்க மாளிகையில் தான் பதுங்கியிருந்தேன். இதோ இந்தத்தூணில் சாய்ந்து நின்ற வேளைதான் என் செவிகளில் இடியாய் அந்த செய்தி விழுந்தது.

அரசகுமாரனை கொன்றவனை தேடி வெறி கொண்டு புறப்பட்ட படை திருகோணமலையில் நான் இல்லாதது கண்டு கோபம் எல்லைமீறி என் கல்யாணிதேவியை மாளிகையோடு

தீமூட்டி கொளுத்துவிட்டனராம்.”

சங்கிலியன் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

வருணகுலத்தானும் கண்ணீர் ததும்ப சங்கிலியனை பார்த்தான்.

“என் தாயை பலிகேட்ட தீ என் கல்யாணிதேவியையும் என்னிடமிருந்து பறித்துவிட்டது. பொல்லாப்பழியை என்னில் சுமத்தி என் கல்யாணிதேவியை கொன்ற அரசகேசரியை நினைக்கையில் என்னால் என்னை அன்று கட்டுப்படுத்தவே முடியவில்லை. நான் யாரோவாக மாறிப் போனேன்.

வெறி கொண்டு சுரங்கத்திலிருந்து வெளிப்பட்டேன். ஏரிக்கரையில்



அரசகேசரியின் தலை என் வாளினால் துண்டாகி கீழே விழுந்த போதுதான் என் மனம் அன்று அமைதி அடைந்தது.

அதன் பின்னர்தான் மந்திரியாரின் வேண்டுகோளை அமோதித்து இந்த அரியணையில் அமர்ந்தேன்.

உங்கள் அனைவருக்கும் சிம்மாசனமாக தெரியும் இந்த அரியணை எனக்கு என் கல்யாணிதேவியின் சமாதியாகவே என்றும் தெரிகிறது.”

என்று கூறுகையில் சங்கிலியன் கண்களில் நீர் எல்லை மீறி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

வருணகுலத்தான் கண்களும் குளமாகி இருந்தன. மன்னரை நோக்கி இப்படியொரு கேள்வியை கேட்டுவிட்டதை எண்ணி அவன் கூனிக் குறுகி நின்றான்.

“அரசே, தங்களைப் பற்றிய இழிமொழிக்கு செவி கொடுத்த என் செவிகளை இப்போதே வெட்டியெறியத் தோன்றுகிறது வேந்தே, அது குறித்து தங்களிடமே வினவிய இந்தக் குறைமதியாளனை மன்னித்து விடுங்கள் வேந்தே!”

என்று மன்னர் முன் மண்டியிட்டு விழுந்தான் வருணகுலத்தான்.

*முடிச்சுக்கள் அவிழும்...*

# தலைநகரில் சிவபூமி

இலங்கையின் பல பாகங்களிலும் தனது சேவைகளையும் பணிகளையும் மக்களின் தேவையறிந்து வழங்கி வரும் கலாநிதி சொஞ்சொற் செல்வர். ஆறுதிருமுருகன் அவர்களின் முயற்சியின் இன்னொரு அங்கமாக சிவபூமி தனது நிலையமொன்றை தலைநகரில் 20.10.2022 அன்று திறந்து வைத்துள்ளது.






# புக்கர் விருது வென்ற இலங்கையர்

இலக்கியத்துக்கு வழங்கப்படும் உயரிய விருது புக்கர் விருது ஆகும். இந்த ஆண்டுக்கான புக்கர் விருது இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணதிலகா எழுதிய தி செவன் மூன்ஸ் ஆப் மாலி அமைடா என்ற புத்தகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை உள்நாட்டுப் போர் குறித்து இந்த நாவல் அமைந்துள்ளது. புக்கர் விருதை வென்றதற்காக 50,000 பவுண்ட் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

இறுதிப் போட்டிக்கு தேர்வான 6 புத்தகங்களில் இருந்து இலங்கை எழுத்தாளர் எழுதிய புத்தகத்துக்கு புக்கர் பரிசு அறிவிக்கப்பட்டது. புக்கர் பரிசை பெறும் இரண்டாவது இலங்கை எழுத்தாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.





ஐ.வி.மகாசேனன்

## உலக ஒழுங்கை தீர்மானிக்கும் சக்தியாக

# மென் அதிகாரத்தின் பரிணாமம்!

சர்வதேச அரசியலின் ஆதாரமாக அதிகாரம் என்பதுவே காணப்படுகின்றது. குறித்த அதிகாரம் அரசுகளுக்கிடையிலான உறவில் பல பரிணாமங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. அதிகாரத்தின் பரிணாமங்களில் முதன்மையானதாகவும், அரசியல் ஆதிக்கத்தின் மையமாகவும் கடந்த காலங்களில் வன்அதிகாரமே கோலோச்சி வந்துள்ளது. உலக ஒழுங்கின் தீர்மான சக்தியாகவும் அதுவே முதன்மை பெற்றது. எனினும், வன்அதிகாரத்தின் மாற்றம் பற்றிய உரையாடல்கள் பனிப்போருக்கு பின்னரான உலக அரசியலில் வியாபித்தது.

குறிப்பாக, பனிப்போர் முடிவில், அமெரிக்கர்கள் சோவியத் அச்சுறுத்தல் இல்லாத உலகில் தங்கள் இடத்தைப் புரிந்துகொள்ள முயற்சித்தனர். நாடு வீழ்ச்சியடைந்து வருவதாக கிட்டத்தட்ட பாதிப் பொதுமக்கள் நம்புவதாகவும், சரிவை நம்புபவர்கள் பாதுகாப்பு வாதத்தை ஆதரிப்பதாகவும், அதிகப்படியான சர்வதேச கடப்பாடுகள் என்று அவர்கள் கருதும் வி‘யங்களில் இருந்து விலக ஆலோசனை வழங்குவதாகவும் கருத்துக்







கணிப்புகள் தெரிவித்தன. எனினும் வளர்ந்து வரும் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் உலகில், இத்தகைய அறிவுரைகள் எதிர்மறையானவை மற்றும் அது தவிர்க்கப்பட வேண்டிய சரிவைக் கொண்டு வரலாம் ஏனெனில் மிகவும் சக்திவாய்ந்த நாடு வழிநடத்தத் தவறினால், சர்வதேச ஸ்திரத்தன்மைக்கான விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும் என்ற உரையாடல்களும் சர்வதேச அரசியலில் முதன்மை பெற்றது. வரலாறு முழுவதும், சரிவு மற்றும் அதிகார சமநிலையை மாற்றுவது பற்றிய கவலை பதற்றம் மற்றும் தவறான கணக்கீடுகளுடன் சேர்ந்துள்ளது. சோவியத் சக்தி வீழ்ச்சியடைந்து, ஜப்பானிய சக்தி உயர்ந்தமை, அமெரிக்க சரிவு பற்றிய தவறான கோட்பாடுகள் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான பொருத்தமற்ற ஒப்புமைகள் ஆகியவை உண்மையான பிரச்சினையிலிருந்து கவனத்தை திசை திருப்பியிருந்தது. இவ்வாறான பின்னணியில் அமெரிக்க களத்தை ஆதாரமான கொண்டு சர்வதேச அரசியல் உரையாடலில் வெளிக்கிளம்பிய அதிகார பரிமாணமாகவே மென் அதிகாரம் காணப்படுகின்றது.

இவ்உரையாடலின் வளர்ச்சி, 21ஆம் நூற்றாண்டு அரசியலில் மென் அதிகாரத்தை முதன்மை கோட்பாடாக்கி உள்ளது. மென் அதிகாரம் பற்றிய தேடல்களை அடையாளப்படுத்தியவர்களாக அமெரிக்க அரசறிவியலாளர்களே முதன்மை பெறுகின்றனர். குறிப்பாக அமெரிக்க அரசறிவியலாளர் ஜோசப் நை 1980களில் மென் அதிகார கோட்பாட்டை அமெரிக்க கொள்கை வகுப்புக்குள் உள்வாங்க வேண்டியதன் தேவையை அடையாளப்படுத்தினார். ஜோசப் நை அதிகாரக் கோட்பாட்பாட்டின் பரிணாமத்தை பின்வருமாறு விளக்குகின்றார்.

**'சர்வதேச விவகாரங்களின் பாரம்பரிய யதார்த்தவாத பார்வையில், சர்வதேச அரசியலின் இறுதி விளையாட்டாக போர் இருந்தது. ஆனால் பல**







**நூற்றாண்டுகளாக, தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்ததால், போருக்கான வலிமையின் ஆதாரங்கள் அடிக்கடி மாறின. மேலும், 21ஆம் நூற்றாண்டில் அதிகரித்து வரும் பிரச்சினைகளில், போர் இறுதியான நடுவர் அல்ல. காலநிலை மாற்றம் அல்லது தொற்றுநோய்களுக்கு இராணுவ வளங்கள் தீர்வு அல்ல, ஆனால் தேசிய பாதுகாப்பு உத்திகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் பொது சுகாதார வளங்களை விட இராணுவ வளங்களுக்கு விகிதாசார கவனம் செலுத்துகின்றன. கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் 1918 இன்ஃப்ளுயன்ஸா தொற்றுநோய் 1945 முதல் நமது அனைத்து போர்களையும் விட அதிகமான அமெரிக்கர்களைக் கொன்றது. முதலாம் உலகப் போரின் நான்கு ஆண்டுகளில் இறந்தவர்களை விட அதிகமான மக்களைக் கொன்றது.'**

என்பதனூடாக வன் அதிகாரம் முழுமையான தீர்வாக அமையவில்லை என்பதையும் அதிகாரத்தின் மாறுபட்ட வடிவங்களின் தேவையையும் அடையாளப் படுத்துகின்றார். அவ்வாறான மாற்று அடையாளமாகவே மென் அதிகாரத்தையும் முதன்மைப்படுத்துகின்றார். மென் அதிகாரம் என்பது, ஒருவரின் சில மதிப்புகளைப் பகிர்ந்து கொள்ள மற்றவர்களுடன் இணைந்து செல்வாக்கு செலுத்தும் திறன் மற்றும் அதன் விளைவாக, சர்வதேச ஒழுங்கு மற்றும் பாதுகாப்பிற்கான ஒருவரின் நிகழ்ச்சி நிரலில் சில முக்கிய கூறுகளைப் பகிர்ந்து கொள்வது ஆகும்.

மென் அதிகாரத்தை முதன்மைப்படும் நை, அதனை அதிகாரத்தின் இரண்டாவது முகமாக குறிப்பிடுகின்றார். மேலும் குறிப்பிடுகையில்,

**'ஒரு நாடு உலக அரசியலில் அது விரும்பும் விளைவுகளைப் பெறலாம். ஏனென்றால் மற்ற**





***நாடுகள் அதன் மதிப்புகளைப் போற்றுகின்றன. அதன் முன்மாதிரியைப் பின்பற்றுகின்றன. அதன் செழிப்பு மற்றும் திறந்த தன்மைக்கு ஆசைப்படுகின்றன. அதைப் பின்பற்ற விரும்புகின்றன. இந்த அர்த்தத்தில், நிகழ்ச்சி நிரலை அமைப்பதும், உலக அரசியலில் மற்றவர்களை ஈர்ப்பதும் முக்கியம். மேலும் இராணுவ அதிகாரம் அல்லது பொருளாதாரத் தடைகளை அச்சுறுத்துவதன் மூலம் அவர்களை மாற்றும்படி கட்டாயப்படுத்துவது மட்டுமல்ல. இந்த மென்மையான சக்தி, நீங்கள் விரும்பும் விளைவுகளை மற்றவர்கள் விரும்புவதைப் பெறுவது மக்களை வற்புறுத்துவதற்குப் பதிலாக அவர்களை ஒன்றிணைக்கிறது.'*** என்கின்றார்.

மென் அதிகாரத்தின் ஆரம்ப உரையாடல்கள் அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கைக்கான வழிகாட்டலுக்கானதாக அமைந்தாலும், அதனை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வெற்றிகரமான விளைவுகளை பெற்றுள்ள நாடாக சீனாவே காணப்படுகின்றது. 2007இல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 17வது காங்கிரஸில் சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோ மென் அதிகாரத்தை சீன வெளியுறவுக்கொள்கையில் முதன்மைப்படுத்த வேண்டியதன் தேவையை பிரதானப்படுத்தினார். அதனை சீனாவின் தற்போதைய ஜனாதிபதி ஷி ஜின்பிங் வெற்றிகரமாக கையாள்வதுடன் சிறந்த அறுவடையை பெற்று வருகின்றார். சீனா தனது மென்மையான சக்தி மூலோபாயத்தால் கலவையான வெற்றியைப் பெற்றுள்ளதாகவும், சீனாவின் கருத்தாக்கத்தின் விதியால் தான் மிகவும் ஆச்சரியப்பட்டதகவும் ஜோசப் நை தனது மென் அதிகாரம் தொடர்பான கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்றரை தசாப்தங்களாக, வளர்ச்சி முயற்சிகளில் சீனாவின் விரைவான முன்னேற்றம், பொருளாதாரத்தில் தன்னை ஒரு முக்கிய முன்னோடியாக முன்னிறுத்தும் ஒரு நனவான முயற்சியுடன் சேர்ந்துள்ளது. 2017ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மாநாட்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் அறிவிப்பு,



நாடுகளிடையே வர்த்தகம் மற்றும் வலையமைப்பை மேம்படுத்துவதில் சீனாவின் ஆர்வம் அதிகரித்து வருவதைக் குறிக்கிறது. பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி என்பது உலகில் சீனாவின் மென் அதிகார இருப்பை நிறுவனமயமாக்குவதற்கும் உலகின் பிற பகுதிகளுடன் இணக்கத்தை உருவாக்குவதற்கும் முன்வைக்கப்பட்ட ஒரு வளர்ச்சியாகும். இந்த முன்முயற்சியானது, அமைதிக்கான பாதை என்று திட்டத்திற்கு சமிக்ஞை செய்யும் நட்புரீதியான ஒத்துழைப்பின் வழிக்கு ஒத்ததாக வைக்கப்பட்டுள்ளது. சீனா தனது கவர்ச்சியான தாக்குதல் அணுகுமுறைக்கு மிகப்பெரிய அளவிலான முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதன் உலகளாவிய மென் அதிகார இருப்புக்கு ஒவ்வொரு ஆண்டும் 10 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவாகும்.

அமெரிக்காவை வளப்படுத்த திட்ட மிடப்பட்ட பொறிமுறையூடாக சீனா இன்று உலகாளும் வல்லமையில் உயர்ந்துள்ளது. அத்துடன் மென்அதிகாரத்தை தனது வடிவமாக உலகிற்கான புதியதொரு அதிகார பரிமாணமாகவும் நிலைநிறுத்தியுள்ளது. எதிர்கால உலக ஒழுங்கில் மென்அதிகாரமே சர்வதேச அரசுகளுக்கிடையிலான உறவின் ஆதாரமாகும் என்பதுவே அரசறிவியலாளர்களது ஆய்வு முடிவுகளும் உறுதி செய்கிறது.



2

# பரியாரியார் VS அய்யர்

தொண்டரடிப்பொடியன்

இளமையை எல்லோரும் விரும்பக் காரணம் இளமை அழகானது என்பது மட்டுமல்ல இளமை ஆரோக்கியமானது என்பதும் தான். அப்படி நினைத்தவர்கள் எல்லோரும் அய்யரின் ஆச்சியை வந்து பார்த்திருக்க வேண்டும். முதுமையையும் விரும்பத்தொடங்கி இருப்பார்கள். தேகமெங்கும் ரேகைகள், வற்றிய சதைகள், சுருக்கங்களின் சருக்கங்கள், வெளிப்படும் என்புகள் என்று முதுமையின் அடையாளங்கள் ஆச்சிக்கு மட்டும் ஆபரணங்களாகத் தெரிந்த விந்தையை என்னவென்று சொல்வது? முத்துக்கள் அற்ற சிப்பியின் அழகை என்றாவது கவனித்திருக்கிறீர்களா? ஆச்சியின் பொக்கைவாயைப் பாருங்கள். இருண்ட குகைகளுக்குள்தானே விலைமதிப்பற்ற பொக்கி'ங்கள் ஒளிந்திருக்கும். ஆச்சியின் வாயிலிருந்து வெளிப்படும் பற்கள் அற்ற சொற்கள் அத்தனையும் அனுபவங்கள். பல்லுப்போனால் சொல்லுப் போகாதென்று சொல்வதற்கென்றே ஒருத்தி வாழ்ந்து கொண்டிருந்தாள்.

தன் ஆச்சிக்கு மூன்றுநாளாக உடம்பு சரியில்லை என்பதால் பரியாரியாரை ஐய்யர் அழைத்திருந்தார். ஆனால் ஐயர் அனுப்பிய ஆளோடு பரியாரியார் மகன் பரதன்தான் வந்துகொண்டிருந்தான்.

பரியாரியாரின் வரவை எதிர்பார்த்திருந்த ஐயருக்கு பரதனின் வரவு ஏமாற்றத்தை அளித்ததாக தெரியவில்லை. அதையும் அவர் எதிர்பார்த்ததாகவே தெரிந்தது.

ஆச்சியின் நாடி பிடித்தென்ன ஆச்சியை ஏறெடுத்தும் பார்க்காமல் பரதன் மருத்துவம் செய்ய தொடங்கினான். கொண்டுவந்த இலைகளை அரைத்து சாறாக்கினான். அய்யரின் தங்கை சரோஜாவின் மகள் கௌசல்யா அந்த சாற்றை பாலில் கலந்து குடிக்க கொடுத்தாள். நாளைக்குள் முன்னேற்றம் தெரியாவிட்டால் மீள வந்து கூப்பிடுமாறு கூறிவிட்டு பரதன் விடை பெற்றான்.



ஆதங்கத்தில் இருந்த ஐயருக்கு ஆத்திரம் தான் வந்தது. ஏ. எல் இல் ஒரு பாடம் கூட சித்தியடையாத இவனெல்லாம் ஒரு வைத்தியரா? இவனது மருத்துவத்தில் சிறிதும் நம்பிக்கை இல்லாத அய்யருக்கு மூக்குக்கு மேல் கோவம் வந்தது. வம்புக்கு வராமல் நிக்கும் பரியாரியாருடன் வம்பு இழுப்பதுதான் சரி என்று முடிவெடுத்தார். ஆத்திரத்தில் அரைகுறையாக குடும்பியை முடிந்தவாறே அய்யர் வீட்டை நோக்கி கிளம்பினார்.

இதுவரை இவர்களுக்கிடையில் நிறையத் தகராறுகள் நடந்ததுண்டு. ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் தன் தொழில் சார்ந்து மற்றவரை எதிர்த்ததில்லை. அந்த ஊரில் இருக்கும் ஒரே ஒரு நாட்டு வைத்தியர் எங்கட பரியாரியார்தான். அதனால் வைத்தியரா பரியாரியாரை அய்யர் அணுகும் போதெல்லாம் பரியாரியார் பழசு எல்லாத்தையும் மறந்திட்டு புது மனுசனா அய்யரை அணுகுவார். அதேபோலத்தான் அய்யரும். அந்த ஊரிலேயே எல்லோருக்கும் புரோகித அய்யர் அவர்தான். அவரும் புரோகித அலுவலாயும், பூசை புனஸ்காரங்கள் சம்பந்தமாயும் பரியாரியாரின் தேவைகளை பூர்த்தி செய்தே வந்திருக்கிறார். வைத்தி லிங்கத்திற்கும் அம்பலவாணருக்கும் பிரச்சனைகள் நிறையவே இருந்தன. ஆனால் பரியாரியாருக்கும் அய்யருக்கும் எந்த மனக்கிலேசமும் இருந்ததேயில்லை. ஆச்சரியமாக இருக்கிறதா? அந்த ஊரில் அனைவரையுமே ஆச்சரியப்படுத்திய விடயம் தான் இது.

செய்யும் தொழிலை இருவருமே நேசித்தார்கள். இயன்றவரை தம் தொழில் சார்ந்து நேர்மையாக இருந்தார்கள். தம் தனிப்பட்ட கோபதாபங்களை அவர்கள் தம் தொழிலில் காட்டியதேயில்லை. ஊர் கண்ணோ பட்டதாலோ என்னவோ இன்று தொழில் சார்ந்து முதல் தடவையாக மோதப் போகிறார்கள்.

இயல்பாக நடக்காத காரியங்கள் நடக்கும் போது இயற்கை முன்கூட்டியதாக சில சமிக்ஞைகள் காட்டும் என்பார்கள். அன்றும் அப்படித்தான் சில அறிகுறிகளை அரங்கேற்றியது இயற்கை. பரியாரியார் வீட்டின் முன் நிற்கும் மகிழமரமும் அந்த அரகேற்றத்தில் தன்பங்கை தீர்த்து வைத்தது. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களாக எத்தனையோ புயல்களையும், சூறாவளிகளையும் கண்டும் அசராமல் இருந்த அந்த மகிழ மரம் தன் கிளைகளில் சற்றே பெரியதொன்றை ஒரு சிறு காற்றுக்கே காவு கொடுத்துவிட்டது. மகிழ மரக் கொப்பு பரியாரியார் படலையில் விழுந்து வாசலை மறித்து நின்றது.

காற்றே விழுத்திவிட்ட கொப்பு கோபச் சூறாவளிக்கு தாக்கு பிடிக்குமா?
பாதையை மறைத்து பயணத்தை தடுக்கலாமா?
பிரளயத்தை தடுக்க இயற்கை எடுத்த முயற்சி கைகூடுமா?

**விடை தேடுவோம்.**

## சாதனைத் தேனீர்

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த இங்கார் வாலன்டின் என்கிற பெண் ஒரு மணி நேரத்தில் 249 தேநீர் தயாரித்து உலக சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை அடைய ஒரு மணி நேரத்திற்குள் குறைந்தபட்சம் 150 கப் தேநீர் தயாரிக்க வேண்டும் என்பது இலக்காக இருந்தது. ஆனால் அவர் ரூயிபோஸ் வகை தேநீரில் அசல், வெண்ணிலா மற்றும் ஸ்டாபெரி என மூன்று வகைகளில் 249 கப் தேநீர் தயாரித்துள்ளார்.



தென்னாப்பரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட தாவரமான அஸ்பலதஸ் லீனரிஸ் என்கிற புதர் இலைகளிலிருந்து தயாரிக்கப்படும் சிவப்பு மூலிகை தேநீரை ரூயிபோஸ் என்று அழைக்கப்படுகிறது.

## சீனாவின் பரிசிற்கு ராஜ மரியாதை

22-வது பிபா உலக கோப்பை கால்பந்து போட்டி நவம்பர் 20-ம் தேதி கத்தாரில் தொடங்குகிறது. இந்த நிலையில், உலக கோப்பை கால்பந்து போட்டியையொட்டி கத்தார் அரசுக்கு சீனா ஒரு ஜோடி பாண்டாக் கரடிகளை பரிசாக கொடுத்துள்ளது. அந்த பாண்டா கரடிகளுக்கு கத்தார் அரசு ராஜ மரியாதை அளித்தது. இந்த பாண்டாக்கள் சீனாவின் சுச்சுவன் மாகாணத்தில் அடர்ந்த காடுகளில் மட்டுமே இருக்கும். ஆனால் கத்தார் ஒரு பாலைவன தேசம் என்பதால் அங்கிருக்கும் தட்பவெட்ப நிலைகள் பாண்டாக்களுக்கு ஒத்துவராது. ஆனால் சீனாவின் பரிசை பெற்ற கத்தார் அரசு பாண்டாக்களுக்கு ஏற்ற மாதிரி சீனாவின் அடர்ந்த காடுகளில் நிலவும் காலநிலை இருக்குமோ அதே காலநிலையை பிரத்யேகமாக வடிவமைத்துள்ளனர். மேலும் அந்த பாண்டா கரடிகளுக்கு ஒவ்வொரு வாரமும் கிட்டத்தட்ட 800 கிலோகிராம் மூங்கில்களை உணவாக அளிக்க கத்தார் அரசு செய்துள்ளது. இரண்டு பாண்டா கரடிகளில் ஒன்று 4 வயது ஆன ஆண். மற்றொன்று 3 வயதான பெண் பாண்டா ஆகும். மேலும் கத்தார் நாட்டுக்கு சீனாவின் தேசிய விலங்கு பாண்டாக்கள் வருவது இதுவே முதல் முறையாகும்.





# 39 ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## அல்கா மலர்ச்சி – தொடர்ச்சியான கண்காணிப்பின் அவசியம்

அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் இலட்சக்கணக்கான நீர்நிலைகள் மீன் பிடிக்கவோ அல்லது நீந்தவோ முடியாத அளவிற்கு மாசடைந்துள்ளன. இங்கு இலங்கையிலும் அண்மைக் காலம் வரை சுத்தமான நீரைக் கொண்டிருந்த பேர வாவி, கண்டி வாவி, பொல்கொட வாவி, மற்றும் அதிகளவான நீரோடைகள் தற்போது மாசடைந்துள்ளன. இவற்றிற் சில நற்போசணையடைந்துள்ளன. அத்துடன் அவற்றில் அல்காகக்களின் மலர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. பேர வாவியை சீர்திருத்தம் செய்வதற்கு பல மில்லியன் ரூபாக்கள் செலவிடப்பட்டள்ளன. எனினும், அவை அனைத்தும் விழலிற்கிறைத்த நீராகி விட்டது.

இன்றும் கூட பேர வாவியில் அல்காக்கள் நிரம்பியுள்ளதோடு, துர்மணம் வீசிக்கொண்டே யிருக்கின்றது. குறிப்பிட்டதொரு தொழிற்சாலையிலிருந்து வெளி யேறும் திரவக் கழிவுகளிலுள்ள நீரை மாசுபடுத்தும் பொருட்களிற்கு குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை பெரும்பாலான நாடுகள் விதிமுறைகளாக கொண்டுள்ளன. உதாரணமாக இலங்கையைக் கருத்திற் கொள்ளும் போது இறப்பர், புடவைக் கைத்தொழில், தோல் கைத்தொழில் என்பனவற்றிற்கு இவ்வாறான கட்டுப்பாடுகள் வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளது. இதனைத் தவிர உள்ளூர் மேற்பரப்பு நீர்நிலைகள், நீர்ப்பாசனத்திற்கும், கடலோரங்கள் என்பனவற்றில் விடுவிக்கப்படும் தொழிற்சாலை திரவக் கழிவுகளிற்கும் பொதுவான நியமங்களையும் வகுத்துள்ளது.



நீர் நிலைகளை மாசடையச் செய்யும் கழிவுகள் சுற்றாடலில் விடுவிக்கப்படுவதைத் தடுப்பதை உறுதி செய்வதற்கு வசதியாக தொழிற்சாலைகளிற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கி, அத் தொழிற்சாலைகளைப் பரிசோதிப் பதற்கான முறையொன்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபை கொண்டுள்ளது. எனினும், வர்த்தமானி அறிவித்தல் நீர் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதில் எந்தளவிற்கு வினைத்திறனாக விளங்குகின்றது என்பதை கொழும்பில் சில நீர்நிலைகளில் உயிரின வாழ்க்கை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், சுற்றாடல் என்பனவற்றில் மோசமான பாதிப்புகளை உண்டாக்கக் கூடிய நீரின் தரங்களிற்கு ஏற்பட்டு வரும் அதிகரித்த அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உலகெங்கிலுமள்ள அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. விசேடமாக இலங்கையில் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

## நீரின் தரம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்

நீரின் தரம் தொடர்பான பல முக்கிய அம்சங்களை கணிசமான இலங்கையர்கள் போதியளவில் அறிந்து வைத்திருக்கவில்லை. குறிப்பிடத்தக்களவான மக்கள் தொடர்ந்தும் மேற்பரப்பு நீர் நிலைகளிலிருந்து பெறும் நீரை கொதிக்க வைக்காமலே அருந்துவதால், இறுதியில் நோய்களினால் வாடுகின்றனர். தெளிவான, ஓடும் நீர் குடிப்பதற்குப் பாதுகாப்பானதென சிலர் அனுமானிக்கினறனர். அத்துடன் ஆபத்தான பக்றீரியாக்கள் அல்லது வைரசுக்கள் தொற்றிய நீர் பொதுவாக நிறமில்லாது, மணமற்று, சுவையற்று காணப்படும் என்பதை அவர்கள் அறிந்து வைத்திருபப்தில்லை.

இதேபோன்று, பெரும்பாலான விவசாயக் குடும்பங்கள் தாமறியாமலே, தமது பண்ணை வளவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து அதிகளவான நைட்ரேட்டைக் கொண்ட நீரை





அருந்துகின்றன. நைட்ரேட்டும் நிறம், மணம், சுவை எதனையும் நீரிற்கு வழங்குவதில்லை. அண்மையில் ஏற்பட்ட சுனாமியால் கடல்நீரில் மூழ்கிய ஆழமற்ற கிணறுகளிலிருந்து அளவிற்கதிகமாக நீரை இறைத்த மைக்கான காரணம் அவ்வாறு இறைப்பதிலுள்ள ஆபத்துக்கள் தொடர்பான அடிப்படை அறிவு இல்லாமையே ஆகும். பல இடங்களில் இதற்கு அதிக செலவேற்பட்டுள்ளதையும் நிரூபி த்துள்ளது. அளவிற்கதிகமாக நீரை இறைத்தமையினால் பாரமான உவர்நீர் படையின் மீது மிதக்கும் இயற்கையான நன்னீர் வில்லை குழப்பப்பட்டது. இதன் விளைவாக சுனாமி புனரமைப்பின் போது அடியிலுள்ள உவர்நீர் வீட்டுக் கிணறுகளிலுள்ள நன்னீரில் உட்புகுந்தது. இறுதியாக சுனாமி ஏற்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் அளவிற்கதிகமாக நீரை இறைப்பதனால் ஏற்படக் கூடிய ஆபத்துகள் தொடர்பானதொரு துண்டுப்பிரசுரம் தயாரிக்கப்பட்டு, அப் பிரதேசங்களில் வாழ்வோரிடையேயும், அலுவலர்களிடையேயும் விநியோகிக் கப்பட்டது.

சில ஆழமான கிணறுகளிலுள்ள நீர் அதிகளவான பார உலோகங்களைக் கொண்டுள்ளது. இவை ஆபத்துகளை ஏற்படுத்தக் கூடியனவாகும். இதேபோன்று சில கிணறுகளில் உள்ள புளோரைட்டின் அளவு பற்சுகாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியளவிற்கு மிக அதிகளவானதாகவோ அல்லது மிகக் குறைவாகவோ கொண்டுள்ளது. ஆனால் இந்நீரை அருந்தும் மக்கள் இதனை எப்போதும் அறிந்து வைத்திருப்பதில்லை.

நீர் அனைத்து உயிர்களிற்கும் சொந்தமானதாகும், மனிதர்கள் அதன் பாதுகாப்பாளர்களே என்பதையும் பொதுமக்கள் முழுமையாக அறிந்து வைத்திருக்கவில்லை. துண்டுப்பிரசுரங்கள், செய்திப் பத்திரிகைகளில் கட்டுரைகளை வெளியிடல், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் போன்ற நிகழ்வுகளை கிரமமாக மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களிடையே தொடர்ச்சியாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்







வேண்டும். அத்துடன் ஏனைய வழிமுறைகள் மூலம் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், சுற்றாடல் என்பனவற்றிற்கு நீர் அத்தியாவசியமானது என்பது தொடர்பாக பொதுமக்களிற்கு அறிவூட்டல் வேண்டும். எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், தனிப்பட்டோர், குழுக்கள், சங்கங்கள், ஏனையோரிற்கும் இது தொடர்பாக அளப்பறிய பங்களிப்பினைச் செய்யும் ஏனையோரிற்கும் பரிசில்களை வழங்கி, அவர்களை அங்கீகரித்தல் வேண்டும்.

### பொதுமக்களின் சுகாதார, ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்தல்

உள்ளூர் கிணறுகள் உட்பட பல நீர்நிலைகளின் மேற்பரப்பு ஈ கோலி (E.Coli) இனால் அசுத்தமடைந்துள்ளது. பெரும்பாலும் இவை மனிதக் கழிவுகளுடன் தொடர்பு கொள்வதால் ஏற்படுகிறது. வீட்டுக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகள் நிலத்தில் கட்டுப்பாடின்றி வீசப்படுதிறது. இதுவும் நீர் மாசடைவதற்கு ஓர் காரணமாகும். வெள்ளத்தை தடுப்பதற்கான சுற்று சுவர் பல உள்ளூர் கிணறுகளில் இல்லை. நீர் தொடர்பான நோய்களில் முக்கியமாக உள்ளூர் சிறுவர்கள் பாதிகப்படுவதாக மருத்துவ மனை புள்ளி விபரங்கள் கூறுகின்றன. பல வறிய மக்களுக்கு நீரை கொதிக்க வைப்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. அவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கக் கூடியதாக இல்லை அல்லது அவர்களுக்கு கட்டுபடியாகாது. குறிப்பாக பொது நீர் வழங்கல் மிகக் குறைவாக உள்ள கிராமப் புறங்களில் பொதுஜன சுகாதார நிகழ்ச்சிகள் பலப்படுத்தப்பட வேண்டும். தனிநபர் மற்றும் உணவு சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். வழங்கப்படும் குடி நீரில் நோயை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் உள்ளதா என பொது சுகாதார அதிகாரிகள் கிரமமாக பரிசோதனை செய்ய வேண்டும்.



ஆராய்வோம்.........

எஸ்.எஸ்.நுஜன்



# டெனிஸ் உலகின் சக்கரவர்த்தி ரோஜர் பெடெரர்

இதுவரை ஒரு ஆண்டில் பெற்ற அதிக தொடர் வெற்றிகளின் எண்ணிக்கை அடிப்படையில், ரோஜரின் மிகவும் வெற்றிகரமான 2006ம் ஆண்டில், அவர் ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது தனது கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றார். தன்னுடைய சொந்த ஊரான பாஸேலில் முதல்முறையாக வெற்றி பெற்றது சிறப்பம்சமாகும், அங்கு அவரது ரசிகர்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியத்தின் தூதரர் ஆகி களத்துக்கு வெளியேயும் பெருமை சேர்த்தார், பெடெரர்.



கடந்த ஆண்டைப் போலவே, 2007 இலும் ரோஜர் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை கைப்பற்றி, பிரெஞ்ச் பகிரங்க தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர். தொடர்ந்து நான்காவது ஆண்டாக (160 கிழமைகள்) உலக தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ரோஜர், ஜிம்மி கானர்ஸின் சாதனையை முறியடித்தார். கிராண்ட்ஸ்லாம் உலக சாதனையாளரான பீட் சாம்ப்ராஸுக்கு எதிராக கண்காட்சிகளில் விளையாடிய



ரோஜர், "மேற்பரப்புகளின் போர்" இல் நடாலுடன் மோதினர்: மேற்பரப்புகளின் போர் (Battle of Surfaces) என்பது நடால் விரும்புகிற களிமண் தரை ஒரு புறம், மற்றும் பெடெரெர் விரும்பிய புல் தரை மறு புறம்.

ஒப்பீட்டளவில் மோசமான பருவத்தின் தொடக்கமாக அமைந்த 2008ம் ஆண்டில், ரோஜருக்கு சுரப்பி காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டது. ஆயினும்கூட, அவர் பாரிஸ் மற்றும் விம்பிள்டனில் இறுதிப் போட்டிக்கு வந்தவர் தொடர்ந்து நான்காவது முறையாக அமெரிக்க ஓபனை வென்று சாதனை படைத்தார். பெய்ஜிங்கில் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்காவுடன் இணைந்து ரோஜர், இரட்டையர் பிரிவில் ஒலிம்பிக் தங்கத்தை வென்றது ஒரு உணர்ச்சிபூர்வமான சிறப்பம்சமாகும்.



2009 ம் ஆண்டு ரோஜருக்கு ஒரு புகழ்பெற்ற ஆண்டாக மாறியது. தனது நீண்டகால காதலியான மிர்காவை ஏப்ரல் மாதம் திருமணம் செய்த ரோஜர், பாரிஸில் நடந்த பிரெஞ்ச் பகிரங்க தொடரை வென்றார். இது அவரது கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை பதின் நான்காக உயர்த்தியதோடு மட்டுமில்லாமல் பீட் சாம்ப்ராஸ ின் 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் என்ற சாதனையையும் சமன் செய்ய வழிவகுத்தது. சில வாரங்களுக்குப் பிறகு அவரது ஆறாவது விம்பிள்டன் பட்டத்துடன், ரோஜர் பெடெரெர் ஒரே ஒரு சாதனை நாயகனானார். ஜூலை 23 அன்று மைலா ரோஸ் அண்ட் சார்லின் ரிவா என்ற இரட்டையர்கள் பிறந்ததன் மூலம் அவரது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சந்தோசம் கூடியது.



2010 சனவரியில், ஆஸ்திரேலிய ஓபனில் ரோஜர் தனது 16வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். பாரிஸ் மற்றும் விம்பிள்டனில் காலிறுதி தோல்விகளுடன் கூடிய கோடைக்காலம் ஆனது. உலக சுற்றுப்பயணத்தின் இறுதிப் போட்டியில் ரோஜர் வெற்றியை பெற்றது பருவத்தின் அற்புதமான முடிவாகியது. தனது அறக்கட்டளையின் ஆதரவுடன் எத்தியோப்பியாவில் ஒரு திட்டத்தைப் பார்வையிட்டதுடன், மேலும் 2010ம் ஆண்டை நடாலுக்கு எதிராக இரண்டு தொண்டு-கண்காட்சி ஆட்டங்களில் விளையாடி முடித்தார்.



கத்தார் ஓபனை வென்ற ரோஜர், மேலும் கடந்த வருட போட்டிகளின் உத்வேகத்தை 2011 இலும் தொடர்வார் போல் இருந்தது. இருப்பினும், இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியன் ஓபனின் வெற்றி பெறாததால் பட்டத்தை தக்க வைக்க முடியவில்லை மற்றும் அதனால் நீண்ட வெற்றியில்லா வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக ரோஜர் ஏடிபி உலக தரவரிசையில் கீழ் இறங்கி, 2011 இல் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வெல்ல முடியாமல் போன போதிலும், சீசனின் முடிவில் அவர் ஒரு அற்புதமான மீள்எழுச்சியை காட்டினார். முந்தைய ஆண்டைப் போலவே, லண்டனில் நடந்த யுவீ உலக சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்றார்.



ரோஜர் மற்றும் அவரது ரசிகர்களுக்கு மற்றொரு சாதனை ஆண்டாக மாறியது 2012. விம்பிள்டனில் தனது 17வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற ரோஜர் பெடெரெர், உலக தரவரிசையில் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறினார். மற்றும் மொத்தமாக 302 வாரங்களுக்கு உலக தரவரிசையில் முதலிடம் வகித்து பீட் சாம்ப்ராஸின் சாதனையை தகர்த்தார். ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றமை அவரது வாழ்க்கையின் மற்றொரு மைல்கல்லாக அமைந்தது. ரோஜர், மேலும் நான்கு பட்டங்களை வென்றார். நம்பமுடியாத 71 போட்டி வெற்றிகளின் (86%) மூலம், 2006 ஆம் ஆண்டிற்கு பின் அவரது மிகவும் வெற்றிகரமான டென்னிஸ் ஆண்டுகளில் ஒன்றாக மாறியது 2012.




ரோஜரின் டென்னிஸ் வாழ்க்கையில், இந்த 2013ம் ஆண்டு அவருக்கும் அவரது ரசிகர்களுக்கும் பல ஏமாற்றங்களைக் கொடுத்தது. முதுகுவலி பிரச்சனைகள் மற்றும் சில வழக்கத்திற்கு மாறான ஆரம்ப தோல்விகள் அவரது நம்பிக்கையை குறைந்ததால், பெரிய போட்டிகளில் சிலவற்றை மட்டுமே அவரால் சாதிக்க முடிந்தது. பதினோரு

ஆண்டுகளில் முதல் முறையாக, உலக தரவரிசையில் ஏழாவது இடத்திற்கு தள்ளப்பட்டார். 2013 இல் ஒரே ஒரு பட்டத்தை வென்றிருந்தாலும் - ஜெர்ரி வெபர் ஓபனில் - அவரது விளையாட்டுத் திறமைகள் பளிச்சிட்டன, குறிப்பாக சீசனின் இறுதியில் பேசல், பாரிஸ் மற்றும் லண்டனில் நடந்த போட்டிகளில், அவரது செயல்திறன் மேம்பட்டிருந்தது.



கடினமான முந்தைய பருவத்திற்க்குப் பிறகு, 2014 இல் தனது வழமைக்கு மீண்டும் திரும்பிய ரோஜர், ஏடிபி தரவரிசையில் ஆறாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார். இந்த பருவத்தில் அதிக வெற்றிகளைப் பெற்ற வீரரும் ஆனார் ரோஜர் பெடெரெர். இந்த வெற்றிகரமான ஆண்டு, ஐந்து பட்டங்கள், டேவிஸ் கோப்பை வெற்றி மற்றும் ஜோகோவிச்சிற்கு எதிரான கண்கவர் விம்பிள்டன் இறுதிப் போட்டி ஆகியவற்றால் சிறப்புற்றது. அவரது வாழ்க்கையில் முதல்முறையாக, ரோஜர் சற்றே பெரிய ராக்கெட் (Racket) உடன் விளையாடி இருந்தார், இது அவரது serve க்கு பயனளித்ததுடன் நீண்ட நேர ஆட்டங்களின் போது அதிக அழுத்தத்தை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.



2015 ஆம் ஆண்டில், ரோஜர் மீண்டுமொரு தொடர் வெற்றிகளைப் பெற்றார். பிரிஸ்பேனில், அவர் தனது தொழில் வாழ்க்கையின் 1000வது ஏடிபி போட்டியில் வெற்றி பெற்றார், மேலும் துபாயில் அவர் தனது 9000வது செட்க்கு serve செய்தார். இஸ்தான்புல்லில், ரோஜர் தொடக்க களிமண் போட்டி தொடரை வெற்றி பெற்றார். விம்பிள்டன் மற்றும் நியூயார்க் இல், இரண்டு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் போதும் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இந்த வருடத்தில் தான் ரோஜர் தனது புதிய யுக்தியான 'SABR' (ரோஜரின் ஸ்னீக்கி அட்டாக்), ஒரு அரை-வலி ரிட்டர்ன் பயன்படுத்துகிறார், இது அவரை வலைக்கு அருகில் வேகமாகச் சென்று எதிராளியின் இரண்டாவது ளநசஎந வை தாக்க அனுமதித்தது. ஆயினும்கூட, 6 பட்டங்கள் மற்றும் 11 இறுதிப் போட்டிகள் இருந்தபோதிலும், ரோஜர் யுவீ தரவரிசையில் தனது நிலையை

தக்க வைக்க முடியவில்லை மற்றும் இந்த ஆண்டை தரவரிசையில் மூன்றாம் நிலையில் நிறைவு செய்தார்.



2016 ஆம் ஆண்டு ரோஜருக்கு காயங்களால் பாதிக்கப்பட்ட ஒரு ஆண்டாகும். வெறும் 7 ஏடிபி தொடர்கள் மற்றும் 2 கிராண்ட்ஸ்லாம்களில் விளையாடிய ரோஜர், டொமினிக் தீம், மிலோஸ் ராவ்னிக், நோவக் ஜோகோவிச், ஜோ வில்பிரைட் சோங்கா மற்றும் இளம் வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் போன்ற சில கடுமையான எதிரிகளுக்கு எதிராக களம் கண்டார். தனது வாழ்க்கையில் முதல்முறையாக ஒன்றல்ல, இரண்டு கிராண்ட்ஸ்லாம் ஆட்டங்களில் களம் காண முடியாமல் போனது. விம்பிள்டனுக்குப் பிறகு சீசனில்



முடித்த ரோஜர், மேலும் இந்த ஆண்டு முழுவதும் குணமடைந்து மீண்டும் வலிமையாக வருவதில் முனைப்பு காட்டினார்.

அது போல் 2017 இல் திரும்பி வந்த ரோஜர் பெடெரர், ஆஸ்திரேலியான் ஓபன், விம்பிள்டன் மற்றும் லவர் கப் என்பவற்றை வென்றார். அத்தோடு, இந்த ஆண்டு, 2012 க்கு பின் முதல் கிராண்ட்ஸ்லாம் வெற்றிகள், 2007 க்கு பின் முதல் அதிக பட்டங்கள் மற்றும் 2006 க்குப் பிறகு அதிக வெற்றி சதவீதம் என்பவற்றை தந்தது. புள்ளியியல்படி, இந்த சீசன் 2007 க்குப் பிறகு ரோஜரின் சிறந்த ஆண்டாக திகழ்ந்தது. பெடரர் முதன்முறையாக நீண்டநாள் போட்டியாளரான நடாலுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் லவர் கப் தொடரில் ஐரோப்பா சார்பாக விளையாடியமை உற்று நோக்கப்பட்டது.



2018 இல் தனது இருபதாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ஆஸ்திரேலியான் ஓபன் இல் வென்ற ரோஜர், அதிக வயதில் உலக தரவரிசையில் முதல் இடம் பிடித்த வீரர் என்ற சாதனையையும்

படைத்தார். அத்தோடு ஹோப்மான் கப் மற்றும் லவர் கப் களில் சாம்பியன் ஆனார்.



2019 இல் ஹாப்மேன் கோப்பையை தக்கவைத்துக்கொண்டதன் மூலம் பெடரர், கலப்பு-பாலின போட்டியில் மூன்று முறை வென்ற முதல் வீரரானார். துபாய் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் பெடரர் தனது 100வது தொழில் ஒற்றையர் பட்டத்தை வென்றார். பெடரர் 2019 மாட்ரிட் ஓபனில் மூன்று ஆண்டுகளின் பின் தனது முதல் களிமண் தரை போட்டியில் விளையாடி தனது 1200வது தொழில் டென்னிஸ் வெற்றியைப் பெற்றார். ரோஜர், 4 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக பிரெஞ்சு ஓபனில் விளையாடியமையும் குறிப்பிடத்தக்கது. விம்பிள்டனில், ரோஜர் ஃபெடரர் அரையிறுதியில் நான்கு செட்களில் ரஃபேல் நடாலை



வெளியேற்றிய பின்னர், தனது 12வது இறுதிப் போட்டியை எட்டி சாதனை படைத்தார் 2008 விம்பிள்டன் இறுதிப் போட்டிக்குப் பிறகு பெடரர்-நடால் விம்பிள்டனில் விளையாடுவது இதுவே முதல் முறையாகும், இது டென்னிஸ் வரலாற்றில் மிகச்சிறந்த போட்டியாக கருதப்படுகிறது. ரோஜர் பின்னர் இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச்சை எதிர்கொண்டார், அவருக்கு எதிராக 4 மணி நேரம் 57 நிமிடங்கள் நீடித்த ஐந்து செட் த்ரில்லில் தோல்வியடைந்தார்.

2020 இல் காயத்துடன் ஆஸ்திரேலியான் ஓபன் ஆடிய ரோஜர் அதில் அரையிறுதிக்கு முன்னேறினார்.



வலது முழங்காலில் சத்திர சிகிக்சை செய்து கொண்ட ரோஜர், 2021 இல் கத்தார் ஓபன் இல் தான் மீண்டும் களம் கண்டார். விம்பிள்டனில், 39 வயதான ரோஜர் காலிறுதிக்கு முன்னேறியதன் மூலம், ஓபன் சகாப்தத்தில் விம்பிள்டன் காலிறுதிப் போட்டியில் ஆடிய அதிக வயதுடையவர் ஆனார். அத்துடன் 19 ஆண்டுகளில் விம்பிள்டனில்




அவர் நேர் செட்களில் தோல்வியடைந்தது இதுவே முதல் முறையாகும், மேலும் 21வது நூ ற்றாண்டில் அவர் 6-0 என்ற செட்டை இழந்தது இரண்டாவது முறையாகும் (முந்தைய சந்தர்ப்பம் 2008 பிரெஞ்சு ஓபன் இறுதிப் போட்டியில் நடாலுக்கு எதிராக ஆகும்).



இதற்க்கு பின், மீண்டுமொரு முழங்கால் சத்திர சிகிக்சை செய்து கொண்ட ரோஜர் 2022 இல் தான் இறுதி ஆட்டத்திற்காக லவர் கப் இல் மீள்வருகை புரிந்தார்.

ரோஜர் பெடெரரின் ஓய்வுக் காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய துமியின் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

மேற்கோள்:
https://www.rogerfederer.com